முத்தமிழறிஞர் கலைஞரை விமர்சித்தும் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கும் வகையிலும் சீமான் பேசுகிறார்!

நாவை அடக்கிப் பேச வேண்டும்!

அமைச்சர் பி.கீதாஜீவன் – சீமானுக்கு எச்சரிக்கை!

தூத்துக்குடி, ஜூலை 13-

“தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்; தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்! மதம், சாதியின் பெயரால் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்க சீமான் முயற்சிக்கிறார். சீமான் தனது மனநிலையை சோதிப்பது நல்லது! என அமைச்சர் பி.கீதாஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

“ஒரு கட்சித் தலைவருக்கு இருக்க வேண்டிய உயரிய பண்புகள் சீமானிடம் கடுகளவு கூட இல்லை! சீமான் நாவை அடக்கிப் பேச வேண்டும்!” என கடுமையோக எச்சரித்துள்ளார்.

அமைச்சர் கீதாஜீவன்

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் -அமைச்சருமான கீதாஜீவன் நேற்று தூத்துக்குடியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த சீமானின் பேச்சை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது. தலைவர் கலைஞர் குறித்து தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவர். இளைஞர்களுக்காக முதல் தலைமுறை பட்டதாரி திட்டம், கல்விக் கடன் ரத்து, நுழைவுத் தேர்வு ரத்து, கணினிக் கல்வி வளர்ச்சி என அவர் கொண்டு வந்த திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அவரைப் பற்றி இழிவாகப் பேசுவதை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது. கட்சித் தலைவர் என்பவர், ஆதரவாளர்களோ நிர்வாகிகளோ தவறாகப் பேசும் போது கண்டிக்க வேண்டும். மாறாக தலைவர் கலைஞர் குறித்துப் பேசும் போது இவர் சிரித்துக் கொண்டு இருக்கிறார். அவர் வழி நடத்தத் தெரியாத நிலையில் இருக்கிறார்.

> **“சீமான் தனது மனநிலையைச் சோதித்துக் கொள்வது நல்லது”**

நமக்கு முன்பாக ஒன்று பேசுகிறார். பின்பு அந்தக் கருத்தை மாற்றிப் பேசுகிறார். கலைஞர் ஓய்வின்றி உழைப்பவர் எனவும், ஆளுமை எனவும் கலைஞர் மறைவின் போது தனது அறிக்கையில் குறிப்பிட்டவர் சீமான் ஆனால் தற்போது வேறு விதமாகப் பேசுகிறார்.

பொறுப்புடன் இருப்பதால் பொறுமையுடன் இருக்கிறோம்!

தி.மு.க. தொண்டர்களைப் பொறுத்த வரையிலும், தற்போதைய தலைவரின் கண் அசைவுக்காகத்தான் காத்திருக்கிறார்கள். பொறுமையாக இருக்கிறார்கள். ஆளுங்கட்சியில் இருக்கிறோம். முதலமைச்சராக தலைவர் பொறுப்புடன் இருக்கிறார். ஆகவே பொறுமையாக இருக்கிறோம்.

அவதூறுக் குற்றச்சாட்டு சொல்லும்போது கூட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை., ‘சீமான் கட்சியைச் சேர்ந்த துரைமுருகன் சாதிப் பேரைச் சொல்லி இழிவாகப் பேசுகிறார்’ என. அருண் என்பவர் புகார் அளித்ததன் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது.

ஆனால், “கருத்துரிமை பறிக்கப் படுவதாக” சீமான் சொல்கிறார். பட்டியலினப் பட்டியலில் 15வது இடத்தில் அந்தச் சொல் இருப்பது சீமானுக்கும் தெரியும். திரைப்படத்தில் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியதற்காக சீமான் சில ஆண்டுகளுக்கு முன்பு வருத்தம் தெரிவித்ததை அனைவரும் அறிவார்கள். ஆனாலும் வாய்க்கு வந்தது போல் பேசி இருக்கிறார். மீண்டும் அதே கருத்தைப் பேசி ‘கைது செய்து பாருங்கள்’ என சீமான் பேசுவது, ஒரு தலைவருக்கான பண்பு இல்லை.

சாதி, மத ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்கும் வகையில் சீமானின் பேச்சு இருக்கிறது. “நாமெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் என நினைக்கிறோம். ஆனால் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் சாத்தானின் பிள்ளைகள் ஆகி நீண்டகாலம் ஆகி விட்டது” என ஒரு அறிக்கையில் பழி சொல்லிப் பேசி இருக்கிறார்.

சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை!

தூய்மைப் பணியாளர்கள் எல்லாம் தெலுங்கில் இருந்து வந்தவர்கள் எனப் பேசி இருக்கிறார். தமிழ், தமிழ்க்குடி எனப் பேசும் இவர்கள் எப்படி சாதிப் பெயர் சொல்லி இழிவாகப் பேசுகிறார்கள்? சட்டம் ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கும் வகையில் அவர் பேசுவதை தி.மு.க. கண்டிக்கிறது.

இன்று ஒன்று பேசுகிறார். அடுத்தாண்டு மாற்றிப் பேசுகிறார். ஆகையால் அவரது மனநிலையைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட முறையில் தவறான சொற்களைப் பயன்படுத்தி சீமான் பேசுவது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கும் வகையில் அமைகிறது. இது ஏற்கத்தக்கதல்ல. நடைமுறைக்குச் சாத்தியமில்லாததை அடுக்கு மொழியில் பேசி தமிழ்ச் சமூகத்தை தவறாக வழி நடத்த முயற்சிக்கிறார்.

கட்சி நடத்த எங்கிருந்து அவர் பணம் வாங்குகிறார் என அனைவருக்கும் தெரிய வாய்ப்புள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி உலக அளவில் நன்கொடை பெற்று வருகிறார்.

பச்சோந்திப் பேச்சு!

தமிழ்நாட்டில் தி.மு.க. எதிர்ப்பைக் காட்டிக் கொள்வதற்காக தி.மு.க.வையும், தலைவரையும் அவதூறாகப் பேசுவதாகத் தெரிகிறது. சீமான் நாக்கை அடக்கிப் பேச வேண்டும். அரசியல் அரைவேக்காட்டுத்தனமாகப் பேசக்கூடாது. அரசியல் முதிர்ச்சி இல்லாத தலைவராக சீமான் தெரிகிறார்.

பச்சோந்தி போல் ஒருநாள் ஒரு கருத்தை ஆதரித்தும், பின்பு எதிர்த்தும் பேசி வருகிறார். அவர் ஒரு அரசியல் தலைவராக இருக்கவே தகுதியானவர் அல்லர். எங்களது தலைவர் குறித்துப் பேச அவருக்கு எந்த அருகதையும் கிடையாது.

இவ்வாறு அவர் பேட்டியின்போது குறிப்பிட்டார்.

நாமக்கல் மாவட்டத்தில்

ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி!

நாமக்கல் ஜூலை 13-

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு கையடக்கக் கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, தேசிய அளவில் நடைபெற்ற கலா உற்வசம் போட்டியில் களிமண் சிற்பம் செய்தல் பிரிவில் 3ஆம் இடம் பெற்ற பாண்டமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவன் மு.க. கதிர்க்குமரன் மற்றும் பண்பாடு மற்றும் விளையாட்டு வாரப் போட்டிகளில் மாநில அளவில் முதலிடம் பெற்ற கொல்லிமலை அசக்காட்டுப்பட்டி நடுநிலைப்பள்ளி மாணவன் கவின்சர்வா ஆகியோருக்கு விருது மற்றும் சான்றிதழ்களையும், கலைத் திருவிழா மற்றும் கலா உத்சவம் நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெற்றமைக்காக முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி உட்பட உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட 6நபர்களுக்கு விருதுகளை அமைச்சர் மா.மதிவேந்தன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, முதன்மைக் கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) எ. பாலசுப்ரமணியன் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இலட்சியவாதிகளின் மகத்துவம் உணர்ந்தவர்!

விருது பெற்ற படைப்பாளர்களுக்கு ‘கனவு இல்லம்’ வழங்கி வருகிறார் முதல்வர்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேச்சு!

சென்னை, ஜூலை 13-

2022-ஆம் ஆண்டில் தமிழில் சிறந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர்கள் மற்றும் நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு பரிசு வழங்கும் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

“புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்...

உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்”

என்றார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்து அகிலமெங்கும் உள்ள தமிழர்களுக்கு கலங்கரை விளக்காய் ஒளிர்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளினை வரும் ஆண்டிலிருந்து செம்மொழி நாளாக சட்டமன்றப் பேரவையில் அறிவிக்க வாய்ப்புத் தந்த ஆட்சிக் காலம் இலக்கியத்தின் நிலைக்களனாகவும் அமுதத்தமிழ் ஊற்றாகவும் திகழ்ந்து வருகிறது.

உலகில் வாழும் ஒரு மனிதன் செம்மாந்த வாழ்வு வாழ வேண்டுமெனில் திருக்குறள் என்னும் ஒற்றை இலக்கியத்தைப் படித்தார்களென்றால் அதுவே போதுமானது...

இனம், மொழி, மதம், சூழல் என எதுவும் தடையில்லை திருக்குறளைப் பயில்வதற்கு... திருக்குறள் வழி நடப்பதற்கு... அத்தகையதொரு ஒப்பற்ற இலக்கியத்தினை உலகில் வேறு எந்த மொழியிலும் காண இயலாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படைத்த குறளோவியத்தைப் பல முறை படிக்கின்ற வாய்ப்பு இளமையிலிருந்தே எனக்கு இயல்பாகக் கிட்டியது. ஒவ்வொரு திருக்குறளுக்கும் நடப்பியல் கதையோடு எழுதியுள்ள பாங்கே அருமையான விளக்கமாகும்.

என்னுடைய வாழ்வின் பெருமை எது என்றால் முத்தமிழறிஞர் கலைஞர் வடித்தெடுத்த வள்ளுவர் கோட்டம் முதலமைச்சர் தளபதி அவர்களால் புத்தாக்கம் செய்திட ஆணையிடப்பட்டு நடைபெற்று வரும் அரும்பணியில் செய்தித் துறை அமைச்சர் என்ற வகையில் தலைமை தாங்கி ஈடுபட்டுவருவதே ஆகும்.

இலக்கியத்தைத் தனது ஆயுதமாகக் கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வழி வந்த நம் முதலமைச்சர் தளபதி அவர்கள் இலக்கியத்தின் அருமையையும் இலக்கியவாதிகளின் பெருமையையும் உணர்ந்தவர்.

இலக்கியவாதிகளின் மகத்துவம் உணர்ந்தே நம் தமிழ்நாட்டின் வீதிகள்தோறும், ஊர்கள்தோறும், மாவட்டங்கள்தோறும் என இலக்கிய நிகழ்வுகள் இடைவிடாது நடந்தேறிட வேண்டும் என்ற முனைப்போடு ஞானபீட, சாகித்ய அகாதமி, முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி விருது பெற்ற படைப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

பெருமக்களே, கழக அரசு ஆட்சி காலத்தின் மாபெரும் சிறப்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2011ஆம் ஆண்டில் சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் நூலாசிரியருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 20,000/-லிருந்து ரூபாய் 30,000/-ஆகவும் பதிப்பாளருக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை ரூபாய் 5,000/-லிருந்து ரூபாய் 10,000/-ஆகவும் உயர்த்தப்பட்டது. 13 ஆண்டுகள் கழித்து நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,நூலாசிரியருக்கான பரிசுத் தொகை ரூபாய் 30,000/-லிருந்து ரூபாய் 50,000/-ஆகவும் பதிப்பாளருக்கான பரிசுத் தொகை ரூபாய் 10,000/-லிருந்து ரூபாய் 25,000/-ஆகவும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு 2023ஆம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்படும் நூல்களுக்கு நடைமுறைபடுத்தப்படும் என்பதை மீண்டும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தகத்தின் அருமையை இளம் தலைமுறையினருக்கு உணர்த்துவோம்... நல்ல நல்ல நூல்களைத் தெரிவு செய்து வாசிப்போம்... படைப்பாளர்களைப் போற்றுவோம்... என்று கூறிப் பரிசு பெறும் அனைவரையும் வாழ்த்தி அமைகிறேன்...

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசினார்.

தமிழ்நாட்டில் மழை!

சென்னை, ஜூலை 13-

தமிழ்நாட்டில் இன்று, நாளை மற்றும் ஜூலை 15ம் தேதி ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நீலகிரி, ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் ஜூலை 15ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் – 9 ம.அ.9.ந.க.எண்.இ1/9258/2023

மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

பணியின் விவரம்	பணியின் மதிப்பு ரூ. (இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
மண்டலம் – 9, பகுதி – 24, வார்டு எண்.118 ல் அண்ணா அறிவாலயம் அருகில் உள்ள ஹயாத் கட்டிடத்தின் முன்புறம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தில் புதியதாக பசுமை பூங்கா அமைக்கும் பணி.	ரூ.160.22	ரூ.1,61,000/-	முதல் வகுப்பு

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **25.07.2024 மாலை 3.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
மின்னணு ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **26.07.2024 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 2298 / ஒப்பந்தப்புள்ளி / 2024

மா.வ.அ / மண்டல அலுவலர்
மண்டலம் – 9

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று (13.7.2024) நன்றி தெரிவிக்கிறார்!

மதசார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர்ஆனந்த் 13.07.2024 (இன்று) காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

ஆம்பூர் சட்டமன்ற தொகுதி – மாதனூர் மேற்கு ஒன்றியம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் ஊராட்சிகள்
காலை 8.30 மணி	ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில்	மேல்குப்பம்
காலை 8.45 மணி	ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில்	பாப்பனப்பள்ளி
காலை 9.00 மணி	அரசமரம் நூலுகம் எதிரில்	வடச்சேரி
காலை 9.15 மணி	பழைய தி.மு.க. அலுவலுகம் எதிரில்	சின்னபள்ளிகுப்பம்
காலை 9.45 மணி	RI கோட்ரஸ் எதிரில்	எம்.எஸ்.குப்பம்
காலை 10.00 மணி	ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில்	வடகரை
காலை 10.15 மணி	பஸ் நிலையம் எதிரில்	வீராங்குப்பம்
காலை 10.30 மணி	பஸ் நிலையம் எதிரில்	தென்னம்பட்டு
காலை 11.00 மணி	பஸ் நிலையம் எதிரில்	மலையாம்பட்டு
காலை 11.15 மணி	பஸ் நிலையம் எதிரில்	அரங்கல்துருகம்
காலை 11.30 மணி	பஸ் நிலையம் எதிரில்	கதவாளம்
காலை 11.45 மணி	ராமர் கோயில் அருகில்	பார்சனாப்பள்ளி
காலை 12.00 மணி	ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில்	மோதகப்பள்ளி
காலை 12.15 மணி	பஸ் நிலையம் எதிரில்	குமாரமங்கலம்
காலை 12.30 மணி	பஸ் நிலையம் எதிரில்	கம்மகிருஷ்ணபள்ளி
காலை 12.45 மணி	பஸ் நிலையம் எதிரில்	கரும்பூர்
காலை 1.15 மணி	பஸ் நிலையம் எதிரில்	வெங்கடசமுத்திரம்
காலை 1.45 மணி	கூட்ரோடு பஸ் நிலையம்	மிட்டாளம்

குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி – மாதனூர் மத்திய ஒன்றியம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் ஊராட்சிகள்
மாலை 4.00 மணி	தேவலாபுரம்	பஸ்நிலையம்
மாலை 4.20 மணி	துத்திப்பட்டு	பஸ்நிலையம்
மாலை 4.40 மணி	பெரியவரிகம்	பஸ்நிலையம்
மாலை 5.00 மணி	சின்னவரிகம்	பஸ்நிலையம்
மாலை 5.20 மணி	கைலாசகிரி	பஸ்நிலையம்
மாலை 5.40 மணி	நரியம்பட்டு	ஊர் மத்தியில்
மாலை 5.55 மணி	அயித்தம்பட்டு	கோயில் எதிரில்
மாலை 6.00 மணி	சாத்தம்பாக்கம்	ஊர் மத்தியில்
மாலை 6.20 மணி	பெரிய கொம்மேஸ்வரம்	ஊர் மத்தியில்
மாலை 6.40 மணி	சோமலாபுரம் ஊராட்சி	ஊர் மத்தியில்

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/ 2712 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3 (மாதவரம்) கனரக மற்றும் இலகுரக வாகன நிறுத்த முனையம், சாலைகள், நிர்வாக மற்றும் பல்நோக்கு கட்டிடங்கள் மேம்படுத்தும் பணிகள் (7 சிப்பங்கள்)

பணியின் உத்தேச தொகை : குறைந்தபட்சம் **ரூ.5.14 லட்சம் அதிகபட்சம் ரூ.5.36 கோடி**
முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 07.08.2024 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2304 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி3/ 2709 /2024 **குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை துறையில் பல்வேறு சாலைகளினல் நடைபாதைகளை (ஆரோக்கிய நடைபாதை) மேம்படுத்தும் பணி மண்டலம் – 4, 5, 9 & 12

பணியின் உத்தேச தொகை: குறைந்தபட்சம் **ரூ.140 லட்சம் அதிகபட்சம் ரூ.210 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 %**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.08.2024 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 07.08.2024 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2303 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் தமிழ்நாடு அரசின் சார்பில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி,ஒன்றிய செயலாளர்கள் குன்றக்குடி சுப்பிரமணியன், கே.எஸ்.ஆனந்த்,ஆகியோர் உள்ளார்கள்.